உ

கடவுள் துணை.

வைகையநாட்டில் வெள்ளகோவிலுக்கு அடுத்த
யாந்தபுரியில் உசிலைவனத்தின்கண்
எழுந்தருளிய

ஐயனார்மகிமைச்சிந்து.

இஃது,

ம-ள-ஸ்ரீ, தாராபுரம் தாலூக்கா கெத்தல்ரேவ்
கிராமம் மோளரப்பட்டியிலிருக்கும்
செட்டிமை இராமசாமிசெட்டியார் குமாரனும்
நாகப்பசெட்டியார் மருமகனுமாகிய
பீதாம்பரமுத்துசாமிசெட்டியார் அவர்களால்
இயற்றப்பட்டு,

காங்கயம்பாளையம் புஸ்தகவியாபாரம்
கா. ர. பாப்பு செட்டியார்
கேட்டுக்கொண்டபடி,

ம-ள-ஸ்ரீ, ஷை கெத்தல்ரேவ் கிராமம்
வேலாயுதம்பாளையம் போர்ட்டு ஸ்கூல் எட்மாஸ்டர்
எஸ். இராமசாமி உபாத்தியாயர்
அவர்களால்
பரிசோதிக்கப்பட்டு,

ஷை கிராமம் லக்கம்பாடி கணிதஜோசியர்
பொன்னுசாமி அய்யங்கார் சகோதரர்
இராமசாமி அய்யங்காரால்
பார்வையிடப்பட்டதை,

சென்னை: புரசை;
ஸ்ரீசுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

விலை] 1921. [அணா-1.

3-வது, பதிப்பு காப்பி-1000.

வல... தஇந்தசலம் யாலருநாசாமி யென்ற வ

...814
574

2. இராகம்-பரசு-ஏகதாளம்.

பல்லவி.

சண்முகனே
அப்பாசிவ சண்முகனே
அய்யாசிவ சண்முகனே
சாமிசிவ சண்முகனே
சம்போசிவ சண்முகனே-உன்னைமிக
நம்பினேனே சாமி-சண்

அநுபல்லவி.

பொன்மயூர மேருங்கந்த
சாமி நேமி பூமி காமி-சண்

சரணங்கள்.

அண்டர்துயர் தீர்த்தவனே
அன்னைவள்ளி நாயகனே
தொண்டர்மனங் கண்டவனே
துதிபணிகள் பூண்டவனே
அண்டுமென்தன் ஓர்மொழிகேள்
ஆறுமுகமான சாமி-சண்

இல்லா மிடியின்குறை
யார்க்குரைப்பே னென்துரையே
பல்லார் துதிபழனி
பரனே யரன்மகனே
எல்லா மறிந்தவன் நீ
யேதுவாதுயெளியன் மீது-சண்

துதிமுறையின் விதியறியேன்
துயருரைக்கும் வழியறியேன்
ததிவரிலே வுனைவெறுப்பேன்
தாள்பணியுங் கதியறியேன்
நிதியளித்து காருமிந்த
நேர சார பாரந் தீர-சண்

உ

கடவுள் துணை.

காங்கையநாட்டில் வெள்ளகோவிலுக்கு அடுத்த
மாந்தபுரியில் உசிலைவனத்தின்கண்
எழுந்தருளிய

ஐயனார்மகிமைச்சிந்து.

இஃது,

ம-ா-ா-ஸ்ரீ, தாராபுரம் தாலூக்கா கெத்தல்ரேவ்
கிராமம் மோளரப்பட்டியிலிருக்கும்
செட்டிமை இராமசாமிசெட்டியார் குமாரனும்
நாகப்பசெட்டியார் மருமகனுமாகிய
பீதாம்பரமுத்துசாமிசெட்டியார் அவர்களால்
இயற்றப்பட்டு,

காங்கயம்பாளையம் புஸ்தகவியாபாரம்
க. ர. பாப்பு செட்டியார்
கேட்டுக்கொண்டபடி,

ம-ா-ா-ஸ்ரீ, ஷை கெத்தல்ரேவ் கிராமம்
வேலாயுதம்பாளையம் போர்ட்டு ஸ்கூல் எட்மாஸ்டர்
எஸ். இராமசாமி உபாத்தியாயர்
அவர்களால்
பரிசோதிக்கப்பட்டு,

ஷை கிராமம் லக்கம்பாடி கணிதஜோசியர்
பொன்னுசாமி அய்யங்கார் சகோதரர்
இராமசாமி அய்யங்காரால்
பார்வையிடப்பட்டதை,

சென்னை: புரசை;
ஸ்ரீசுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1921.

விலை] [அணா-1.

3-வது, பதிப்பு காப்பி-1000

உ

கடவுள் துணை.

சாற்றுக்கவிகள்.

ம-ள-ள-ஸ்ரீ, தாராபுரம் தாலூக்கா கெத்தல்ரேவ் கிராமம்
வேலாயுதம்பாளையம் போர்ட்டு ஸ்கூல் எட்மாஸ்டர்
எஸ். இராமசாமி உபாத்தியாயர் இயற்றிய

வெண்பா.

உத்தமமாக்கொள்வ ருலகி லுசிலைவனக்
கத்தன்மிசைசிந்து கவிமாலை—பத்தியுடன்
பேமிலிசைமேளநகர்ப் பீதாம்பரமுத்துச்
சாமிமொழிந்தானமுதந் தான்.

ம-ள-ள-ஸ்ரீ, ஷை யூர் இந்நூலாசிரியரது போதனாசிரியராகிய
முத்துசாமிசெட்டியார் குமாரன் மணியம்
அப்பாச்சிசெட்டியார் இயற்றிய

வெண்பா.

தூதாம்பரன் றிருமால் தோன்றலுசிலைக்காவான்
சீதாம்புயப்பதத்திற் சிந்திசையால்—பீதாம்பர
முத்துச்சாமிக்கவிஞன் முன்னிமொழிந்தானிஃது
தித்திக்கின்ரசம்பால் தேன்.

ம-ள-ள-ஸ்ரீ, இந்நூலாசிரியர் மைத்துனராகிய
நா. சின்னசாமிசெட்டியார் இயற்றிய

கட்டளைக்கலித்துறை.

நத்தினங்களுலவுவயல் சூழ்மாந்தைபுரிநாட்டு ராயன்மீதில்
வித்துவக்கும்பினம்புகழ வேணவிசைகொடுசிந்து விளம்பினனால்
சித்தியட்ட-மாதியொடு மோடிவித்தைசெய்துமிகு கீர்த்திபெற்ற
மைத்துனன்பீதாம்பர மாலமுத்துச்சாமிக்கவிஞ மகிபரேரே.

உ

கடவுள் துணை

ஐயனார் மகிமைச்சிந்து.

விநாயகர் துதி.

வெண்பா.

பொன்னாணிகுளமும் பூம்பொழில்சூழ்மாந்தைநகர்ப்
பொன்னுருகிலேவனப் பூரணன்மேல்—நன்மகிமைச்
சிந்துசொலச்சிந்தைதனிலை சிந்தாமல்நற்றுணையாம்
தந்திமுகத்தெந்தையிரு தாள்.

கும்மி.

விநாயகர் துதி.

1 அரியான் புத்திரன் மீதினிலே மகிமைச்
சிந்துயான் கூறிடவே அறம்புகழ்
செல்வ மிகுந்திடவே திரு
வணிமாமுக னிருதாளிணை
அருகாலமும் மறவாமலே
அடிபணிந்தேற்றித் தமிழுரைக்க ஐயன்
படிமிசைவந்து நிதங்காக்க
வருகுவாய் ஐங்கர தேவனே என்னிட
மனதில் குடியிருக்க என
தையன்புகழ் சிறக்க மறை
மதவாரணமுக மேனியே
பொருளேயருவுரு வாகியே
வந்தமர்ந்தஞான கற்பகமே எந்தன்
செந்தமிழுக்குநீ காப்பாமே.

முருகர் துதி.

1 சீரார் கலாப மயில்மிசை யேறியே
சேவற்கொடி பிடித்து என
தாவற்படி நடித்து மகிழ்
திருமால்திரு மருகாவுன
தருளானது தருவாயிங்கு
செப்பிடுமையனார் சிந்திலுக்கு உந்தன்
சிந்தைமகிழ்ந்திட வந்தெனக்கு

2 தாரா ருசிலைவனநாதர் தன்புகழ்
சாற்றிட வுன்னருளே பெறப்
போற்றினேன் வரமருளே திகழ்
தரைமீதுயர் வரைமீதமர்
துரையேயருமறையே கமழ்
தார்குழல்வள்ளிமணவாளா தெய்வ
யானைமகிழும் திருமேதாளா.

—

சரஸ்வதிதுதி.

என்பிறனி நல்லதங்காள் (என்றவர்ணமெட்டு)

1 அரியரனருள் புத்திரனென அவனிமீதினிலே - கொடியோர
அஞ்சிடும்படி வந்திடும்மென தையனார்மகிமை (எனதைய)
2 கரியபைங்கடல் சூழுமிப்புவியோர் மகிழ்ந்திடவே - சிறியேன்
கழறிடும்மொழி குழறிடாமலே காத்தருள்வாயே (என்னைக்கா)
3 அரிசரிகுழ லன்னையேயுன தடியிணைதொழுதேன் - நிதம்
அடியன்நாவினிற் குடியிருந்தெனக் கருள்புரிவாயே (எனக்கரு)

—

ஐயனார் உற்பவ வரலாறு.

பொன்னுலவு சென்னிகுளம் என்ற (காவடிச்சிந்துமெட்டு)

1 சீருலவுபார்மிசையிற் பேர்பெறுவித்யாதரப்பெண்
செந்திருவைநாடியுகம்கோடியே தவம்
புந்தியுடனிணைந்துசெய்யநாடியே மலர்ச்
செய்யதிருமகன் வையமிசைவர
கையின்வீணையின் உய்யுமிசைகளைச்
செப்பமலர்மாதுமனமகிழ்ந்துமே இவள்
ஒப்பவொருமாலைதரத்தேர்ந்துமே
2 பேருலவுமாலைதிரு மாதுதரவிணையிற்
பிணித்துமகிழ்வோடுவிடைகொண்டுமே வானிற்
கைத்தில்வரத்துருவாசர் கண்டுமே திருப்
பேணியருள மாலைதருதிநீ
பேதையேயென மாதுவிடம்வொடு
பெற்றமலர்மாலையிவர்க்காகவே தரப்
பெற்றமார்லோகமிவரேகவே

3 காருலவுவெள்ளிமலை போலவயிராவதத்திற்
காவலனிலங்கவும்பல்வாத்தியம் அலை
மேவுகடல்போலெங்குமசாத்தியம் முழங்கக்

கனிந்துவானவர் குனிந்துபணியவும்
புனைந்துமாதர்கள் நினைந்துநடிக்கவும்

கண்மனங்களித்துயர்தேவேந்திரன்-பவனி
கண்டுதுருவாசதவவேந்திரன்

4 தாருலவுமாலைதனைப் பேறிலங்கவிந்திரற்குத்
தந்திடவதனையற்பமாகவே யானை
கந்தரத்தணியவணியாகவே மாலை

தன்னை யானை தன முன்னங்கால்கொடு
பின்னமாக்கியே மண்ணித்தேய்த்திடத்

தவமுனியுங்கண்சிவந்துகோபமே-கொண்டு
பவமடையக்கூறிவிட்டார்சாபமே

5 இந்திரனடைந்தவ சுந்தரநிதிமுதல்
வெல்லவும்கடல்விழுங்கிச்செல்லவே துயர்
மல்லமகவானமரர்புல்லவே சென்று

இணைந்தமேருவை யணைந்தவ்வயனிடம்
பணிந்துகூறிடத் தணிந்துபிரமனும்

பாவருங்கடலடைந்துபூரணன்-பதம்
மேவிபோதுகித்திடலும்நாரணன்

6 வந்துமுன்னின்றுங்கள துயர் சிந்துவன்கடல்கடைந்து
மந்தரங்கொண்டின்றவுணர்நீருமே கடல்
மன்னிடுகவென்றனைவோருமே சென்று

மலையையடைவொடு அலைசெய் கடை
நிலையநிறுவியே தலைசெய்வாசுகி

மன்னவசுரர்சுரருங்கூடியே-கடைய
வந்தனவமிர்தமிகநாம

7 சொந்தமங்கட்கிந்தமிர்த மென்றவுணர்பந்திமிகச்
சூழ்ந்துவரக்கண்டமரர்சேர்ந்துமே அரியைத்
தாழ்ந்தவரிடங்கொடுக்கத்தேர்ந்துமே தாழ்ந்து

சுரர்களுக்கிடில் பெரிய மாவரு
மரியசூழ்ச்சிபொருட் துரியசெய்துநாம்

தூயவமிர்தம்பகிர்தல்நன்றெனு-ஒரு
மாயமோகினியுருவங்கொண்டன்ன்

8 அந்தரம்நிகர்குழலும் இந்துவைநிகர்முகமும்
கண்களயில்போல்மிளிரமாமுலை அமிர்த
கும்பமெனநின்றிலகமேகலை இடையிற்
கலகலெனவொலி யிலைகமுலைதுகில்
விலகவருமிவள் அலகிலழகினைக்
கண்டுதவமாமுனிவர்யோகர்-மையல்
கொண்டனர்நிலையிலினியாவர்

9 மையல்கொண்டசுரரெலாந் தையலின்வடிவழகை
வன்னிதஞ்செய்தேமொழிகுவாரிவை பெண்ணே
உன்னுடையபேரெதுந்தனூரெவை என்று
வணங்கியெங்களின் குணங்களுக்கிசை
யணங்கேநீகதி மணங்கொளமிர்தினை
வார்த்திடுவாயென்றவுணரோங்கியே-சொல்ல
கூர்த்தவிழிமாதமிர்தம்வாங்கியே

10 தையலர்கருத்தை யனும்மறகிலானிதென்ன
சாகசமாய்க்கூறுகிறீரென்றுமே நகை
யாகவுரைசெய்துநீங்களின்றுமே சென்று
தரையில்யாவரும் புனலில்மூழ்கியே
விரைவில்வருகுவீ ரெனவுரைத்திடத்
தானவரனைவர்களுமிவ்விடம்-விட்டு
வானமர்சலம்படிந்துமிவ்விடம்

11 வையமிசைவந்தவரைத் தையலும்வரிசையுடன்
வந்திருக்கச்செய்தமிர்தமேந்தியே அவுணர்
நொந்திடக்கண்மாமுலைப்பிராந்தியே கொள்ள
வந்தவசுரர்க்குப் பிந்தியதிகமாய்த்
தந்திடுவமெனச் சொந்தமொழிசொலி
வானவர்க்கமிர்தமெல்லாம்வார்த்தனள்-கண்டு
தானவர்மனங்கொதித்தங்கார்த்தனர்

12 ஐயனுங்கருடன்மீதிற் றுய்யபாற்கடலடைந்தார்
அன்றவுணர்சென்றசுரர்மீதிலே சண்டை
கொண்டிடப்பிரமனுமப்போதிலே
அமரர்அசுரர்கள்
சமரையமைவுசெய் திவருமேகிட
ஆயிரங்கண்ணேனமார்வகினர்-பதி
காய்சினத்தவுணர்களும்போயினர்

186094

13 விண்ணவர்பணிந்திடநற் கண்ணுதல்கடலடைந்து
விண்டுவினைக்கண்டுதுதித்தாடியே அன்று
கொண்டமோகினியுருவம்நாடியே என்னை
வேண்டியன்றநீர் பூண்டவுருவொடு
ஈண்டுவருகநாம் காண்டுமென்றிட
மேவிமோகினியுருவங்கொண்டனன்-அதை
மாதுபாகனும்கண்ணுற்கண்டனன்

14 பெண்மேனின்னமுகினைப்போல் கண்ணில்யாமறிந்ததில்லை
பேணியெனைச்சேருதியென்றோடியே தழுவ
நாணியவளோடுதல்கண்டோடியே பரமன்
பேதைமாயையின் ஆசையாலுயர்
நாதவீரியம் ஓதநீரெனப்
பெருகிவரும்போதுதித்தநீத்தனே-மானே
உரிமையொடுகார்த்தருள்மாசாத்தனே

15 மன்னவர்விண்ணவர்முதல் நண்ணியனுதினம்பணி
மாந்தைநகர்மேவுசிலைவாசனே வல்ல
மாமுனியைத்தோழமைகொள்நேசனே நிதம்
வந்துபணிபவர் பந்தவினைவகை
சிந்திவிழவருள் தந்துகிருபைசெய்
மாதுபூரணைமகிழ்மணாளனே-எனைப்
பாதுகார்த்தருள்கமலத்தாளனே

16 தன்னருள்சுரந்துனது கண்ணருளைத்தந்துநிதம்
தாமதஞ்செய்யாமலெனைக்காரையய்யா உசிலை
மாதவனைத்தமருநாட்டுராயய்யா எந்தன்
சகலவினைகளு மகலவுனைநிதம்
பகலுமிரவுநான் புகலவருள்தருந்
தாரணிதவள்மதவாரணா-புட்கலை
பூரணைமகிழும்பரிபூரணா

ஐயனார் பராக்கிரமம்.

பாளைவாய் கமுகில்வந்து என்ற (காவடிச்சிந்துமெட்டு.)

1 காட்சிதரும் நாட்டுத்துரை நாச்சிமுத்து ஐயனை
மாட்சிமை பெரும்முலகோர் வாழ்கவே — அருள்
ஆட்சிகிரி சூலிதுர்க்கை சூழ்கவே

2 பூரணைபுட் கலையொடு பேச்சிமகா மாமுனியும்
தாரணையின் மீதுதுதித் தாடவே — கணங்கள்
பேரணிய தாய்நிறைந்து பாடவே

3 கச்சைகட்டுங் கருப்பணன் எச்சரிக்கை யென்றுகூற
வச்சிரக்கை தண்டுகொண்ட மாடனும் — கையில்
விச்சித்திர வாள்கைகொண்ட வேடனும்

4 கட்டியத்துக் குப்பணனும் கனகமோடிச் செல்லையனும்
தட்டிக்கச்சை கட்டுமதுரை வீரனும் — இடையில்
ஒட்டிச்சல் லடம்புனைகே ராளனும்

5 தொட்டியத்துச் சின்னனுடனே துலுக்கச்சின்னு எதிரச்சின்னு
மட்டடங்கா வீரச்சின்னு தீரனும் — யார்க்கும்
[illegible] கட்டளக வீரனும்

6 அர்திமுனி சண்டிமுனி யொண்டிமுனி காளியுடன்
சந்திமுனி மொண்டியிரு ளப்பனும் — பொல்லா
மந்தைமுனி யோடுமரு ளப்பனும்

7 மந்தரக்காட் டேரியுடன் சுந்தரக் குமாரமுத்து
வந்துநிதம் கண்டுபுகழ்ந் தாடவே — தங்கள்
சிந்தைமகிழ்ந் தன்புடனே கூடவே

8 ஒத்தைச்சடை பூதங்களும் [illegible]தையும்
சுற்றிவந்து அடிதொழுது ஆடியே — நின்று
பத்தியங்கள் சொல்லிப்பதம் பாடியே

9 சத்திகே டயம்துபாக்கி குத்திட்டி வளைதடியும்
சித்திரச் சிங்காரவில்லு வேலுமே — கொண்டு
சுத்திலும் பூதங்கள்நின்று சேலுமே

10 வீசியே துடைகள் தட்டிக் கூசியே யொதுங்கின்று
பேசிடும்சத் தங்களண்ட முட்டவே — ஆர்த்து
வாசியை யடக்கிப்புகழும் தட்டவே

11 மல்லரியம் பைலவண்டை மத்தளம் பேரிகைபூரி
சல்லரி யுரிமைதனில் காளமே காவில்
சொல்லவுரி தானபல மேளமே

12 எட்டுத்திசை யும்மதிர மட்டப்பாரை மீதிற்கொலு
திட்டமதாய் வந்தமர்ந்த மெய்யனே எந்தன்
கஷ்டமதைத் தீர்த்தருளு மையனே

ஐயனார் புகழ்.

தெள்ளுதமிழுக்குதவுசீலன் என்ற (காவடிச்சிந்துமெட்டு)

1 சீர்பெருகும்மாங்கைநகர்வாசன் அன்பர்
தீவினையைத்தீர்க்கும்விசுவாசன் என்று
தினமுமுனைப்பணிய மனதுமகிழ்வாய்த்தேடிச்
சேர்வார் துதி கூறுவார்

2 வந்துஉந்தன் சந்நிதிமுன்நின்று எந்தன்
வெந்துயரம்தீர்ப்பதெப்போதென்று சொல்லி
வாடிப்புவிமேல்விழுக்க [illegible]
மன்னி மனே துன்னி

3 சித்தப்பிரமைகொண்டுநின்றுவாடி வினை
தீர்த்திடுவாயென்றுஉன்னைத்தேடி வந்து
திருக்கனககொலுச்சபைமுன் உருக்கமுடன்நின்றுமனம்
தேர்வார் களி கூர்வார்

4 சித்திரக்கொலுச்சபைமுன்நின்று தலை
சுத்தியேபேய்ஆடுதுபாரென்று பலர்
செப்பிட [illegible] ஒப்பிடாமாதரைவிட்டு
[illegible] துயர் வெல்லும்

5 வச்சிரக்கிரீகிடமுந்துலங்க கையில்
வாளுடனேதெண்டாயுதமிலங்க என்முன்
வந்துஉந்தன்பாதம்தந்து எந்தன்வினை தீர்க்கவிப்போ
வாவா என்னைக் காவா

6 சல்லியங்கள்கற்றபலவீரர் பெயர்
சொல்லியெழுதிடும்நிமிஷநேரம் உன்னைத்
தாழ்ந்திடவவனுயிரைப் போழ்ந்துவதைசெய்தென்றுகும்
[illegible] துயர் தீரும்

நாவவினையேயுருவாய்வந்து பெண்ணைப்
பற்றினதினாலேமனம்நொந்து உன்னைப்
பணியும்விதிமறந்து பிணிவகைக்குட்சிக்கிடாமல்
பரனே காரும் அரனே

8 உசிலைவனநாதனென்றபோதே கொடும்
பசிபிணியுமேகிடுந்தப்பாதே எனது
உத்தமமுத்தர்கள் சித்தர்கள்நித்தமும் வணங்குசிலை
வைரார் மலர்த்த தாரா

ஐ ய னா ர் து தி.

இந்தச்சட்காவண்டியேரம்மா என்றவர்ணமெட்டு.

மாந்தைநகர்க்கரசேவாரும் எந்தன்
மனத்தின்துயர்தனைத்திரும்
வர்னம்படர்ந்தமுலை மின்னார்வலையிற்சிக்கி
வாதைப்படாமலெனைப் பாதுகாத்திடவிப்போ (மாந்)

இந்தஜென்மமெடுத்தேன்நானே உன்னை
ஏற்றிப்பணிந்தறியேன் நானே
எத்தனையோகோடி தப்பிதம்செய்தாலும்
அத்தனையும்பொறுத்து சித்தமகிழ்வாயென்முன் (மாந்)

அதிககணவீரப்பிரதாபனே அன்பர்
ஆபத்தைத்தீர்க்க அருளும்பாலனே
அடியாரினைப்பகைக்கும் கொடியோர்தனைப்புவியில்
பொடியாக்கிடும்படியே அடியேன்விண்ணப்பம்செய்தேன் ()

தேகமனித்யமெனத்தானே யானும்
தெரியாமல்கெட்டலைந்தேன்நானே
வேகமதாய்எமன் வாகனமீதேறி
நாகபாசத்துடனே நாளைவராமுனமே (மாந்)

யோகஜெபநேமநிஷ்டையே செய்ய
ஒன்றுந்தெரிந்திடாதமட்டியே
உலகமதிற்பிறந்து அலகைபோலத்திரிய
நலமொன்றினுந்தெரியா நாயேனைஎன்முன் (மாந்)

செந்தீக்கொளுந்தெழும்பச்சீறி எமன்
வந்திடும்போதுதடுமாறி எந்தன்
சிந்தையதுவேறு பந்தமதைநாடாமல்
உந்தனடியிணையை வந்தனைசெய்யும்படி (மாந்)

பந்தபாசங்களெனைச்சூழ்ந்து செய்யும்
தொந்தரவினாலேமனந்தாழ்ந்து புவிப்
பற்றதனிலேமயங்கி யுற்றலைவுராதுனது
பொற்றிருவடியைநிதம் பெற்றிடவருள்புரிய (....)

உந்தன்பாதாரவிந்தந்தானே நிதம்
சொந்தமென்றேதுதித்தேனானே தினம்
வந்திடுந்துன்பங்களது எந்தனையணுகிடாமல்
உந்தனருள்பதத்தை தந்தாதரித்திடவே (மாந்)

ஐயனார் துதி.

பவணகிரியதனுட்டானே என்ற (காவடிச்சிந்துமெட்டு)

1 அரியரன்புத்திரனெனவே யாருந்தொழுவே இந்த
அவனிமிசையெழில் உசிலைவனநடு
தவசில்பரனென கொலுவிலமர்திரு
வருளே ஞானப் பொருளே

2 என்னைத்தொடரும்பிணிதானே அகலநானே உன்னை
எனதுமனதினில் நினைந்துகவிதினம்
கனிந்துபாடியே பாடித்தேனாமே
ஏழை இந்த வேளை

3 வந்தெனதுதுயர்தீரும் முகம்பாரும் எழில்
மாந்தைநகர்தனில வேந்தனெனவமர்
காந்துபரிமள மார்ந்தநறுமலர்
மாலை அன்பு கூர்வாய்

4 துஷ்டரை...க்குஞ்சிங்காரா ஓம்ரீங்காரா என்னைத்
தொடரும்...பிதனைக் கடரும்படிசெய்து
படியின்மிசைவு... தடிமையெனைக்காரும்
துரையே அன்ப... இறையே

5 சந்தனைசதனயப்பிரம்மம்நீயே அதுமெய்யே உன்னைத்
தொழுதிடும்படி. யேனைப்புவிமிசை
சோரவிடுவதுநீதியோ என்ன
சூதோ என்மேல் வாதோ

6 நாச்சிமுத்தையனே கேளும் பலநாளும் பொல்லா
நஷ்டகிரகத்தால் துஷ்டபிணியெனைக்
கிட்டியணுகியே கஷ்டப்படுத்தாமல்
நாதா வரம் தாதா

7 மாகாளதேவனே வாரும் துயர்தீரும் ஒரு
வாரமொன்றினுக் காயிரங்கிடாய்
தீரமாகவே வீரப்பலிகொள்ளும்
மணியே அன்பர்க் கனியே

8 கள்ளியங்காட்டில்வாழ்தேவா என்முன்வாவா உந்தன்
கருணைதந்தென திருவையகற்றிடத்
தருணமிதுதநி கிருபைபுரிந்தெனைக்
காரும் வினை தீரும்

பலாமுனிவர் துதி.

லீலாமயூரமீதில் என்றவர்னமெட்டு.

ஆகாரவீரதீர மாகாளதேவனே
அடியேனைக்காரும்நேமனே-பூமனே
அண்டினேனுன்னை மண்டலத்துள்ளோர்
தொண்டனானென்று கண்டிடும்படியே (ஆகார)

அன்றுஉந்தன்வனத்தில் சென்றுஅசமுகி
அயிராணிதன்னைத்தேடியே-ஓடியேவா
அங்கைதொழுதே மங்கைபயந்து
பொங்கியழவே செங்கைதுணித்த (ஆகார)

மங்களவாரமதில் பொங்கலுடனாட்டடும்
இங்கிதமாய்க்கொண்டாடியே-உனைத்தேடியே
வந்திடுவார்கள் சிந்தையில்நாடி
சொந்தமாகக்கூடி பத்தியாய்க்கோடி (ஆகார)

 ஐயனார்மகிமைச்சிந்து.

அத்தனைபேர்க்கும்வரம் சித்தம்மகிழவே
அருள்தண்டாயுதக்கையனே-எனதையனே
அத்தனே உன்னை இத்ததிபணிந்தேன்
சித்தம்மகிழ்ந்து நித்தமும்வாவா (ஆகார்)

வாழி.

வாழிநான்மறை மாதவதானங்கள்
வாழிமாமறை மன்னருலகுளோர்
வாழிமாந்தை நகருசிலைவனம்
வாழிஐயன் மலரடிவாழியே.

ஐயனார்மகிமைச்சிந்து

முற்றுப்பெற்றது.

விளம்பரம்.

சர்வவிஷ முறிப்பு.

மனிதர்கள் ஒவ்வொருசமயத்தில் தமக்குந் தெரியாமல யாதொரு ஆகாதபண்டங்கள்புசித்தால் அதற்கு இன்னதுபுசித்தால் இன்னவைகள் முறிப்பென்று கருதார்கள், ஆகையால் இந்தச் சர்வவிஷமுறிப்பிலுள்ளவையை கவனித்துக்கொள்வார்களானால் எளிதில் தாங்கள் புசித்த ஆகாதபண்டத்தினாலுற்ற கெடுதியை அப்போதே முறித்துக்கொள்வதற்காகும் இதனை ஒருமுறை வாங்கிப் பார்த்துவிட்டாலும் ஓர்வைத்தியன் நமதுஅருகிலிருப்பதைப்போலாகும். இதன் விலை அணா-1.

பாச்சிகை சாஸ்திரம்.

மனிதர்களின் சுகாசுகத்தைக் கவனித்துக்கொள்வதானால் இந்த பாச்சிகைசாஸ்திரத்திற் சொல்லியபடியே மரத்தினாற்செய்த பாச்சிகையை யுருட்டி அதில் குறிப்பித்திருக்கும் இலக்கத்தின்படியே வாசித்துப்பார்த்தால் நன்மை தீமை இன்னதென விளங்கும்.

இதில் தொடுகுறிசாஸ்திரமும் அடங்கியிருக்கின்றன.

இதன் விலை அணா-1.

கா. ர. பாப்பு செட்டியார்.

புஸ்தகவியாபாரம் காங்கயம்பாளையம்

காங்கயம்போஸ்டு கோயம்புத்தூர் ஜில்லா.

ஐயனார் மீது கீர்த்தனை.

வே... ஸ்ரீ, இந்நூலின் பரிசோதினா... ...மூலமிர்வ
எஸ். இராமசாமி உபாத்தியாயர் இயற்றிய

ஐயனார் மீது கீர்த்தனை.

நானே ஒருநாளுமுனை மறவேனே என்ற கீர்த்தனைமெட்டு.

இ-ம்-தேசிகம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஐயாஎன்னையாதரிப்பாய் அன்பர்மெய்யா-புகழ்
அருமாமறை முனிவோர்துதி
புரிமாங்கைதயின் வனமேவிய (ஐயா)

அநுபல்லவி.

மெய்யாகியதெய்வம் உன்னை
விடவேறெவ ரினைநாடுவன்
அடியேனுயர் படிமீதினில் (ஐயா)

சரணங்கள்.

மஞ்சுலவிஞ்சியி லங்குசிலைப்பதிவாசன் மாங்கை
பஞ்சுகநன்பதிவந்த வருட்பிரகாசன் என்று
விஞ்சிடுமன்பர் வியந்துபுகழ்ந்தவர்
அஞ்சிரசின்கை குவிந்துபணிந்தருள்
மிஞ்சிதிதம்பர வுங்கமலம்புனை
செஞ்சரணந்தனை நம்பினேனன்புடன் (ஐயா)

மெல்லியரின்பசுங்கனை நன்னெறைநாடி பொருள்
செல்வமிகுந்தசுதந்தர மென்றவைதேடி மண்ணில்
தொல்லைவரும்பிணி கொண்டவர்தங்களின்
நல்லமருந்தென வந்தவனின்புகழ்
சொல்லிநிதம்பணி யுந்தமியன்றனை
தல்லலகன்றிட வந்தருள்தந்தருள் (ஐயா)

பூமினைசெண்டுகைகொண்ட சிலம்பணிதாளா ராம
சாமிநறுங்கவிமாலை புனைந்திடுதோளா மிகு
நேமமுடன்றுதி பூரணைபுட்கலை
மாமுலைமங்கை யணுளவலங்கிர்த
தேசர்கள்மங்கள வாரமடைந்தவர்
பூசைபுரிந்திடு மாவுசிலைப்பதி (ஐயா)

ஐயனார்மீது கீர்த்தனை முற்றிற்று.

186094

கல்வியில்மிகுந்த கனதனவான்களே!

நம்முன்னோர்களாகிய மகன்னியர்களும் 18 - சித்தர்களும் ஜீவர்கள்மேல் கருணைவைத்து உலோகோபகாரமாய் எழுதிவைத்த அளவிறந்த சாஸ்திரங்களில் அதிக அருமையான சாஸ்திரம் பக்ஷிசாஸ்திரமேயாம். இச்சாஸ்திர மானது அதிக சிலாக்கியப் பட்டதென்பதை "பல்லிசொல்பவனோடு பதில்பேசாதே, பஞ்சபக்ஷிக்காரனைப் பகைக்காதே, சாங்கற்றவனோடு சகவாசம் பண்ணாதே" என்னும் பழையமொழியே விளக்குகின்றது தற்காலம் அகஸ்தியர், போகர், ரோமரிஷி முதலியோர் எழுதியதாக பஞ்சபக்ஷி சாஸ்திரங்கள் வெளிவந்திருந்தாலும் ஷை சாஸ்திரமானது இதுவரையும் முற்றுமே வெளிவந்ததில்லையென்பது அனேகருக்குந் தெரியும். அதுவுமல்லாமல் தற்காலம் வெளிவந்துலாவும் நூல்களில் ஒன்றிலாவது பக்ஷிதொழில் நடை என்பது உண்மையாயெழுதியிருக்கவில்லை. இச்சாஸ்திரமானது வைத்தியர், ஜோசியர், மாந்திரீகர் முதலியோருக்கும் மற்றுமுள்ள சகல குடும்பத்தாருக்கும் அவசியந்தேவையானது. இந்நூல் ஆசிரியர் இல்லாமலேயே பாலர்முதல் அனைவரும் அதிக எளிதில் தெரிந்துக் கொள்ளும்படியாகவும், வரிசைக்கிரமமாகவும் அனேக அதிகாரங்களாகவும் மூலமும் உரையுமாக எளிய செந்தமிழில் எழுதியுள்ளது. நினைக்கும் காரியங்களை முடிப்பதற்கும், பிணிகளை இலேசாகநீக்கவும், வாழ்நாள் விவரத்தை தெரிந்துக்கொள்ளவும், பகைவரை வெல்லவும், பிறர்க்கு நடந்த விஷயங்களையும் நடக்கப்போகும் விஷயங்களையும் திரிகாலக் ஞானம்போல் சொல்லவும், மனிதன் முக்கியமாய் அடையவேண்டிய ஞானமார்க்கத்தை இலேசில் பெறவும், இந்நூலே சிலாக்கியப்பட்டது. ஆதலால் உண்மையாகவும் தொழில்நடைகள் சரியாகவும் அமைந்துள்ள பக்ஷி சாஸ்திரம் இது ஒன்றுதான். இதில் கொக்கோகசாஸ்திரத்திலுள்ள அமுர்தஸ்தான அலங்காரமென்னும் அமுர்தநிலை ஏற்றமும் இறக்கமும் நன்றாயெழுதியிருக்கின்றது. விலை அணா 12.

கா. ர. [illegible] செட்டியார்.

புஸ்தகவியாபாரம் காங்கயம்பாளையம்

காங்கயம்போஸ்ட் கோயம்புத்தூர் ஜில்லா.

சென்னை-600 008

உ

முருகன் றுணை.

முருகர் ஜாவளி.

கர்ச்சையா கவுனகுதாகேஸியெலாயா

தேசிகங்காரனசோ ஜேசேஜகாயா யென்றவர்ஊமெட்டு.

1. இராகம்-ஜங்கலா-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆதியாகவந்தவன் நல்லானைமுகனே அழகியவானைமுகனே
நீ பாதுகாக்கவேனும் பசுபதிமகனே (ஆ)

அநுபல்லவி.

நீதியாகநிதமும் நின்னை நேசித்தேனுனோர் நின்னைநேசித்தேனு
னோர், கோதிலாதகுணமுடை குஞ்சரமே நீர் (ஆ)

சரணங்கள்.

1. அன்பர்கள்துதிக்கிரங்கும் அங்குசபாசா அனுதினம் அங்
குசபாசா என்
வன்பிணியைத்தீர்த்தாளுவாய் வல்லபைநேசா (ஆ)

2. ஆனதம்பிகாதல்தீர அடவியானையாய் - வள்ளிமுன்னே
அடவியானையாய் நீ
போனதாலேபுகலுவேனுன் புகழைக்கோடியாய் (ஆ)

3. என்வினையைத்தீர்த்தருள வெண்ணினேன்சேயே-நிஜமாக
வெண்ணினேன்சேயே என்
அன்னைதந்தைகுருதெய்வ மடங்கலும் நீயே (ஆ)

4. ஆசைகொண்டு ராஜாராம் நின்னருளைநாடவே - பலவிதம்
அருளைநாடவே உனைப்
பூசைசெய்துபோற்றிநின்றன் புகழைப்பாடவே. (ஆ)

உ

கடவுள் துணை.

விளம்பரம்.

இதனால் சகலமான கனதனவான்களுக்குத் தெரிவிப்பது யாதெனில்; இப்புஸ்தகமும், அடியில்கண்டபுஸ்தகமும், இன்னும் இஸ்கூலுக்குரிய புஸ்தகங்களும், ஆறுமுகநாவலர் புஸ்தகங்களும், கதை, அம்மானை, நாடகம், விலாசம், கீர்த்தனை, புராணம், ஜோசியம், வைத்தியம், சதகம், சில்லரைபுஸ்தகங்களும், வேண்டியவர்கள் வி. பி. மூலியமாயும் நேரிலும் விலை சரசமாகவே பெற்றுக்கொள்ளலாம்,

அநுபோகவயித்திய பிரம்மரகசியம்
8-காண்டம்சேர்ந்தது.

இந்த (அநுபோகவயித்திய பிரம்மரகசியமென்னும்) நூலானது ஜெகந்நாதஸ்தலம் ஸ்ரீமான் கோஷாயி சுவாமிகளால் நெடுவருடங்களாக காசிமுதலான திவ்வியக்ஷேத்திர யாத்திரைவாசிகளுக்கு தருமத்திற்கு உபயோகித்துவந்த சத்தியமான உத்தமமுறைகள் யாவையும் ஒவ்வொருவரும் வயித்தியரைவேண்டாமல் தாங்களே செய்துக்கொள்ளத்தகுந்த முன்னூறுமுறைகளடங்கிய (அநுபோகவயித்திய பிரம்மரகசியமென்னும்) புத்தகம் 1-2-3-4-5-6-7-8 காண்டங்களாகப் பிரித்து அச்சிட்டு முடிந்திருக்கிறது. முதற்காண்டத்தில்மாத்திரம் சுமார் (300) முறைகளுக்குக் குறையாமலும் அடங்கியிருப்பதன்னியில் ஒவ்வொருமருந்துகளின் பாகமும், இடைக்குறிப்பும்,புடமிட்டமும்,அறைப்புகணக்கும், அளவின்றிதானமும், செய்பாகமும், உண்பாகமும், பத்தியவிதியும், பரிகாரநெரியும், இவைகள்யாவும் உயர்ந்ததாளில் அச்சிட்டு புல்சுவிகோபயிண்டுசெய்து விக்கிறயஞ்செய்துவருகிறது. அவரவர்கள் இஷ்டம்போல ஒவ்வொருகாண்டங்கள் தனித்தனியாகவும்,எட்டுகாண்டங்களும் ஒரேகட்டடமாகவும், கிடைக்கும்.

முதற்காண்டம் 1-க்கு விலை அணா	0	8	0
மேற்படி 4-காண்டமும் ஒரேகட்டடம்	2	0	0
மேற்படி 8-காண்டமும் ஒரேகட்டடம்	4	0	0

எமது விலாசம்.

கா. ர. பாப்புசெட்டியார்.

புஸ்தகவியாபாரம்

காங்கயம்பாளையம், காங்கயம்போஸ்டு.

கோயம்புத்தூர்ஜில்லா.